## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### 1989, ஏப்ரல் 3, திங்கட்கிழமை.

### பங்குனி 21, விபவ — திருவள்ளுவர் ஆண்டு, 2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில், காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

''வெள்ளத் தனைய மலர்நீட்டம், மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு''

நீர்ப் பூக்களின் தாளின் நீளம், அவை நின்ற நீரின் அளவின வாகும்; மாந்தர்தம் உயர்வு அவர்தம் உள்ளம் உயர்ந்து நிற்கும் அளவினதாகும்.

### 1. இரங்கல் குறிப்பு.

#### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநிலச் சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப் பினர்களான திருவாளர்கள் கே. எஸ். பெரியசாமி கவுண்டர் அவர்கள் 10—12—1988ஆம் நாளன்றும், மற்றும் ராஜ குரு நாதன் அவர்கள் 27—3—1989ஆம் நாளன்றும் மறைந்ததை இந்தப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. கே. எஸ். பெரியசாமி கவுண்டர் அவர்கள், 1937ஆம் ஆண்டிலிருந்து 1939 வரை ஈரோடு பொது கிராமப்புற தொகுதி யிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த, சென்னை மாநிலச் சட்ட மன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ராஜ குருநாதன் அவர்கள், 1946ஆம் ஆண்டிலிருந்து 1952 வரை தெற்கு மத்திய நிலவுடைமையாளர்கள் தொகுதி யிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநிலச் சட்ட மன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். அன்னார்களின் மறைவு குறித்து, அவர் களை இழந்து விட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை இந்தப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகை யில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித் துளி மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித் துளி, மவுனமாக எழுந்து நின்றனர்.)